ஸ்ரீ சக்ர ஞானேஸ்வர்

30

# உண்மையான தெய்வீகம்

தெய்வங்கள் மற்றும் அணுத்துகள்கள் குறித்த அற்புதமான இரகசியங்கள், அணுத்துகள்கள்தான் தெய்வம் என்ற மனிதனின் நம்பிக்கை, மனித ஆத்மா மற்றும் தெய்வீக ஆத்மாக்களின் பல்வேறு நிலைகள் மற்றும் தெய்வங்களின் வரிசைக்கிரமங்கள்

–இதுவரையில், அறிவியல் ரீதியில் சொல்லப்படாத உண்மைகள்–



தொகுதி - I

## ஸ்ரீசக்ர ஞானேஸ்வர்

# உண்மையான தெய்வீகம்

தெய்வங்கள் மற்றும் அணுத்துகள்கள் குறித்த
அற்புதமான இரகசியங்கள்

அணுத்துகள்கள்தான் தெய்வம் என்ற மனிதனின் நம்பிக்கை

மனித ஆத்மா மற்றும் தெய்வீக ஆத்மாக்களின்
பல்வேறு நிலைகள் மற்றும் தெய்வங்களின்
வரிசைக்கிரமங்கள்

– இது வரையில், அறிவியல் ரீதியில்
சொல்லப்படாத உண்மைகள் –

## தொகுதி–I

**Copyright © 2022 by Srichakra Gnaneswar**

India copyright - Registration number: L- 99949/2021 dated 01/03/2021
Revised content is registered in Diary number: 20921/2022-CO/L dated 06/10/2022
USA copyright - Registration number: TXu 2-213-848 dt: July 15, 2020 & 1st Revision: 1-12020609321 dt: 6/16/2021, 2nd Revision: 1-12020488571 dt: 12/12/2022 UK copyright - Registration number: 284735642 dt: 16/07/2020 & updated 10/12/2022

All rights reserved. No part of this book may be used or reproduced by any means, graphic, electronic, or mechanical, including photocopying, recording, taping or by any information storage retrieval system without the written permission of the author except in the case of brief quotations embodied in critical articles and reviews. The True Divinity collection of books may be ordered through booksellers or by contacting:

ONLINE POINT PRIVATE LIMITED,
33, Ramanujam Street, T. Nagar, Chennai-600017, Tamil Nadu, India,
**www.thetruedivinity.com,** Email: thetruedivinity@gmail.com, Ph: +91- 7418248999

Disclaimer: Because of the dynamic nature of the Internet, any web addresses or links contained in this book may have changed since publication and may no longer be valid. The views expressed in this work are solely those of the author and do not necessarily reflect the views of the publisher, and the publisher hereby disclaims any responsibility for them. The contents of this book are entirely based on the personal experiences and knowledge of the author about various gods, cosmic energy, their powers and characteristics, etc., and derived from the author's insight that he gained by following his inner consciousness and through the guidance from various ancient gods by performing Fire rituals. The principles prescribed herein are not intended to criticize or demotivate any caste, creed, faith, cult, race, belief, customs, rites, and ritual practices. They are not against any spiritual leaders of any persuasion whatsoever. It is up to the individuals' discretion to accept or ignore the concepts explained in this book. The author and publisher assume no responsibility if anyone may feel harmed, hurt, intimidated, or insulted in any manner whatsoever by the contents of this book. This book aims to help humanity upgrade their worship methods to obtain efficient blessings from cosmic energy and the gods in life and the afterlife. Any people depicted in stock imagery provided by Getty Images are models, and such images are being used for illustrative purposes only. Certain stock imagery © Getty Images.

ISBN: 978-93-xxxxx-xx-x (Hardcover)
ISBN: 978-93-xxxxx-xx-x (Paperback)
ISBN: 978-93-xxxxx-xx-x (eBook)

First Edition: 2023

## தொகுதி–I

(1) தெய்வம் என்பது எது ? அணுத்துகள்களா ? அல்லது அழிவற்ற மனித ஆத்மாக்களா ?

(2) அணுத்துகள்கள்தான் தெய்வம் என்ற மனிதனின் நம்பிக்கை

(3) அழிவற்ற வாழ்வில் தெய்வங்களது பிரபஞ்ச சக்திகள்

(4) அணுத்துகள்களின் ஆற்றல் – அதிர்வுகள் மற்றும் பிரதிபலித்தல்

(5) பிரபஞ்ச அதிர்வுகள் அடிப்படையில் தெய்வங்களுக்கு பெயர் வைத்தல் – மும்மூர்த்திகள் மற்றும் இதர தெய்வங்கள்.

(6) மனித ஆத்மாக்களின் பல்வேறு நிலைகளும், தெய்வீக ஆத்மாக்களின் வரிசைக்கிரமங்களும்.

## தொகுதி–II

(7) மனிதகுல நன்மைக்கு, பல்வேறு தெய்வங்கள் இருக்க வேண்டியதன் முக்கியத்துவம்

(8) தெய்வங்கள் தங்குவதற்கு உருவாக்கப்பட்ட கோவில்களும், அங்கு பிரபஞ்ச சக்தி அடிப்படையிலான வசதிகளும்

(9) சிலை வழிபாட்டின்போது, அணுத்துகள்களின் பிரதிபலிக்கும் குணங்கள்

(10) தொன்மையான தெய்வ வழிபாட்டின்போது, ஏற்படும் அணுத்துகள்களின் பிரதிபலிப்பும், அதிர்வுகளும்

(11) தலைமை பீடத்திலுள்ள பெண் தெய்வ வழிபாடு (ஆதிபராசக்தி)

(12) பெண் தெய்வீக ஆத்மாக்களின் வழிபாடு (தசா மகா வித்யா மற்றும் சாக்தம்)

(13) காவல் தெய்வங்கள், கிராம தெய்வங்கள், குல தேவதைகள் மற்றும் முன்னோர் வழிபாடுகள்

(14) ஒன்பது கிரகங்களும், அவற்றின் அணுத்துகள் வழிபாடும் (சவுரம்)

(15) தெய்வங்கள் மற்றும் கோவில்களில், செய்யக் கூடியதும், செய்யக் கூடாததும்

## தொகுதி–III

(16) தெய்வீக ஆத்மாக்களுக்கு சக்தியூட்டும் அக்னி பூஜைகள் (அக்னி ஹோமம்)

(17) தெய்வீக விலங்குகள், சின்னங்கள் மற்றும் வீட்டிலுள்ள பூஜையறையின் மீது அணுத்துகள்கள் ஏற்படுத்தும் தாக்கம்

(18) பக்தர்களுக்கு அருள் வழங்கும் தெய்வங்களின் அனுத்துகள்களை கையாளும் பிரபஞ்ச சக்திகள்

(19) கோவில்களில் ஒழுங்கற்ற முறையில் செய்யப்படும் சடங்குகளும், மறக்கப்பட்டுவிட்ட இரத்த பலியிடும் வழக்கமும்

(20) வழிபாட்டுத் தலங்கள் அனைத்திலும் தெய்வங்கள் வாழ இயலுமா ?

(21) தெய்வீகம் மற்றும் ஆன்மீகம் – இவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகள்

(22) தெய்வ வழிபாடு தவிர, மற்ற வழிபாடுகள் மீது அணுத்துகள்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள்

(23) “நான் யார் ?” என்பது பற்றியும், முக்தி நிலை பற்றியும் மனிதனின் தேடுதல் – உண்மைநிலை

(24) மனித மூளையும் அதன் பிரபஞ்ச ஆற்றல்களும்

(25) மனித ஆத்மாவின் உருவாக்கமும், அதன் பல்வேறு நிலைகளும்

## தொகுதி–IV

(26) மரணத்துக்கு பின் செய்யப்படும் இறுதி சடங்குகளும், அவை மனித ஆத்மாக்களின் மீது ஏற்படுத்தும் தாக்கங்களும்

(27) தெய்வீகம் குறித்து மக்களிடையே நிலவும் தவறான நம்பிக்கைகள்

(28) உண்மையான முக்திநிலை, மற்றும் மனித வாழ்க்கையின் இறுதி குறிக்கோள்

(29) கர்மவினை, சாபம் மற்றும் விதி ஆகியவை எப்படி செயல்படுகின்றன ?

(30) தாந்த்ரீகம் / ஜோதிடம் போன்ற அமானுஷ்ய அறிவியல் மீது பிரபஞ்ச அணுத்துகள்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள்

(31) கட்டடங்களுக்குள் நடைபெறும் அணுத்துகள்களின் ஓட்டமும், அவை ஏற்படுத்தும் தாக்கங்களும் – வாஸ்து சாஸ்த்திரம்

(32) பெயரியல், எண்கணிதம் மற்றும் ரத்தினக் கல் ஆய்வு

(33) கோவில்களின் தேவைகள், மற்றும் ஒரு கோவிலில் உங்களது ஆத்மாவை குடிபுகச் செய்வது எப்படி ?

முடிவுரை

# முன்னுரை

''தெய்வம்'' என்ற வார்த்தையை மனிதர்கள்தான் உருவாக்கினர். ஆனால், தன்னை ''தெய்வம்'' என்று கூறுமாறு இப்பிரபஞ்சம் சொல்லவில்லை. நாம் யாரை வேண்டுமானாலும், தெய்வமாக வணங்கலாம், யாரை வேண்டுமானாலும் தெய்வம் என்று அழைக்கலாம். அந்த அடிப்படையில், மக்கள், பல்வேறு **அழிவற்ற மனித ஆத்மாக்களையும்,** இயற்கையில் பல்வேறு ரூபங்களில் காணப்படும் (கிரகங்களின் கதிர்வீச்சுக்கள் மற்றும் காற்று, நீர், நெருப்பு, பூமி, ஆகாயம் என்ற பஞ்சபூதங்கள் போன்றவை) **அணுத்துகள்களையும்** தெய்வங்களாக வணங்கி வருகின்றனர். இத்தகைய தெய்வங்கள் அனைவரது ஆற்றல்களும், ஒரு வரையறைக்குட்பட்டதுதான். நமது மனித வாழ்விலும், மரணத்திற்கு பிந்தைய வாழ்விலும், அழிவற்ற மனித ஆத்மாக்கள் மற்றும் பிரபஞ்ச அணுத்துகள்களின் உதவி நமக்கு முக்கியமாக தேவைப்படுகிறது. அத்தகைய உதவியை அவர்களிடமிருந்து, நாம் எப்படி பெறுவது, எப்படி அதை சிறப்பான முறையில் நம்முடைய மனித வாழ்க்கைக்கும், நமது ஆத்மாக்களின் மறுமை வாழ்க்கைக்கும் பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்துதான் இப்புத்தகம் விரிவான முறையில் விளக்குகிறது.

**அழிவற்ற மனித ஆத்மாக்களை தெய்வமாக வணங்குதல்:**

ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை கொண்ட ஒரு பெரிய நிறுவனத்தை நடத்தும் தொழிலதிபரை, அங்குள்ள பணியாளர்கள், 'முதலாளி' என்று அழைக்கின்றனர். அதேபோல, வெகுசில ஊழியர்களே உள்ள ஒரு சிறிய கடையின் உரிமையாளரும், அந்த ஊழியர்களால், 'முதலாளி' என்றுதான் அழைக்கப்படுகிறார். ஆனால் இந்த இரண்டு முதலாளிகளின் அறிவு, திறன், ஊழியர்களின் எண்ணிக்கை, சொத்து மதிப்பு போன்ற காரணிகளை முன்வைத்துதான், சமூகத்தில் அவர்களது அந்தஸ்து நிர்ணயம் செய்யப்படுகிறது. அதேபோல, தெய்வங்களின் (அழிவற்ற மனித ஆத்மாக்கள்) அந்தஸ்த்தும், தெய்வத்திற்கு தெய்வம் மாறுபடுகிறது. ஒரு தெய்வத்தினுடைய அணுத்துகள்களை கையாளும் திறன், அவர்களது கீழ் செயல்படும் தெய்வீக பரிவாரம் ஆகியவற்றின் அடிப்படையில், மக்கள் பல்வேறு தெய்வங்களுக்கு பல்வேறு தெய்வீக பெயர்கள் / பட்டப் பெயர்களை கொடுத்து வணங்கி வருகின்றனர். ஒரு மனித ஆத்மாவின் மறுமை வாழ்வு சிறப்பாக இருக்க வேண்டுமென்றால், ஏதாவது ஒரு தெய்வத்தின் (அதாவது, கோவில்களில் வசிக்கும் அழிவற்ற மனித ஆத்மாக்கள்) துணை அதற்கு தேவைபடுகிறது. யார் அந்த தெய்வங்கள் என்பது குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:–

1. மும்மூர்த்திகள் (சிவபெருமான், மகாவிஷ்ணு, பிரம்மன்) என்று அழைக்கப்படும் தொன்மையான அழிவற்ற ஆத்மாக்கள். அவர்களது கீழ் இயங்கி வரும் பெரிய தெய்வீக பரிவாரத்தில் உள்ள பல மனித ஆத்மாக்கள், பரிவார தெய்வங்களாக நிலை உயர்த்தப்பட்டு அவர்களை ஈஸ்வர், கணபதி, முருகர், இராமர், கிருஷ்ணர் என்ற பெயரில் வணங்குகிறோம்.
2. கோவில்களில், பல்வேறு தெய்வீக பட்டப் பெயர்களோடு, தெய்வீக பரிவாரத்தில் அங்கம் வகிக்கும், கால பைரவர், சண்டிகேஸ்வரர் போன்ற அழிவற்ற மனித ஆத்மாக்கள்.
3. அம்மன், தேவி, அம்பாள், மாதா போன்ற தெய்வீக பட்டப் பெயர்களோடு, ஆதி பராசக்தி என்ற தலைமை தெய்வத்தின் கீழ் செயல்பட்டு வரும் அழிவற்ற பெண் ஆத்மாக்கள்.
4. கருப்பர், முனீஸ்வரர், ஹனுமான் போன்ற தெய்வீக பட்டப் பெயர்களோடு, காவல் தெய்வங்களாக வணங்கப்பட்டு வரும் அழிவற்ற மனித ஆத்மாக்கள்.
5. கிராம கோவில்களில், குல தெய்வங்களாக வணங்ககப்பட்டு வரும் முன்னோர்களது அழிவற்ற ஆத்மாக்கள்.

**இயற்கையில் காணப்படும் அணுத்துகள்களை தெய்வமாக வணங்குதல்**

1. காற்றில் மிதக்கும் சுதந்திரமான அணுத்துகள்கள், கிரகங்களிலிருந்து வரும் கதிர்வீச்சுக்கள், அதிர்வுகள் என பல்வேறு ரூபங்களிலுள்ள அணுத்துகள்கள், கீழே குறிப்பிட்டுள்ளபடி தெய்வம் அல்லது தேவன் என்ற பெயரில் வணங்கப்பட்டு வருகின்றன. ஆனால், அவர்கள், அழிவற்ற ஆத்மாக்கள் அல்ல. இப்பிரபஞ்சத்தையும், எங்கும் பரவியுள்ள அணுத்துகள்களையும், மக்கள், 'சர்வ வல்லமை படைத்த தெய்வம், பிரபஞ்ச சக்தி, பிரம்மன்' போன்ற பல்வேறு பெயர்களின் மூலம் வணங்கி வருகின்றனர்.
2. பூமியின் ஐந்து கூறுகளை (நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம்) "ந ம சி வா ய" என்றும் அல்லது பஞ்ச பூதங்கள் என்றும் வணங்குதல்.
3. பூமியைச் சுற்றியுள்ள எட்டு திசைகளிலிருந்து வரும் அணுத்துகள்களை, குபேர தேவர், வருண தேவர், இந்திர தேவர், நிருதி தேவர் என எட்டு திசைகளுக்குரிய தெய்வங்களாக வணங்குதல். சூரிய குடும்பத்தையும் அதில் உள்ள சூரிய தேவன், சந்திர தேவன், புத தேவன், சுக்ர தேவன், சனி தேவன் போன்ற ஒன்பது கிரகங்களிலிருந்து வரும் கதிர்வீச்சுக்களையும், 27 நட்சத்திரங்களையும் வணங்குதல்.
4. ஒளி/ நெருப்பு சக்தி (எண்ணெய் விளக்குகள் மூலமாக வெளியாகும்), அணுத்துகள் அதிர்வுகள் (மந்திரங்கள்), அணுத்துகள் ஓட்டத்தை விளக்கி உலோக தகட்டில் வரைந்துள்ள படம் (யந்திரம்), தெய்வீக சின்னங்கள் ஆகியவற்றை தெய்வமாக வணங்குதல்.

**கீழ்க்கண்டவற்றை நாம் வணங்கும்போது அணுத்துகள்களின் பிரதிபலிக்கும் இயல்பு செயல்படும் முறை**

நமது சுற்றுப்புறத்தில் உள்ள பிரபஞ்ச அணுத்துகளுக்கு, பிரபலிக்கும் தன்மை, நினைவாற்றல் (ஞாபகத்திறன்) மற்றும் இதர சக்திகள் உள்ளன. நாம் கீழ்க்கண்டவற்றை வணங்கும்போது, அவற்றைச் சூழ்ந்துள்ள அணுத்துகள்கள், வணங்கப்படும் பொருள் அல்லது வணங்கப்படும் மனிதரின் இயல்புகளை பிரதிபலிக்கின்றன.

1. புனிதமான ஆத்மாக்கள் அல்லது மதிக்கத்தக்க நபர்களை நாம் வணங்கும்போது, மனித வாழ்வில் அவர்கள் கொண்டிருந்த அன்பு, அமைதி போன்ற இயல்புகளை, அணுத்துகள்கள், நம் மீது பிரதிபலிக்கின்றன.
2. சுதந்திரமாக சுற்றித் திரியும் அணுத்துகள்களை நாம் எந்த இடத்தில் வைத்து வணங்கினாலும், அவை நமக்குள்ளே புகுந்து நம்மிடம் ஏற்கனவே உள்ள இயல்புகளையும், திறன்களையும் அதிகப்படுத்துகின்றன.
3. நமது மூதாதையர்களின் ஆத்மாக்களை வணங்கும்போது, அவர்கள் மனித வாழ்வில் கொண்டிருந்த இயல்புகளையும், திறன்களையும், அணுத்துகள்களுக்குள்ள நினைவுகளின் அடிப்படையில், நம் மீது பிரதிபலிக்கின்றன.
4. பல்வேறு தெய்வங்களின் சிலைகள் மற்றும் படங்களை நமது வீட்டு பூஜையறையில் வைத்து வணங்கும்போது, அணுத்துகள்கள் அந்தந்த தெய்வங்களின் இயல்புகளை, நம் மீது பிரதிபலிக்கின்றன.
5. தெய்வங்களது வாகனங்களாக படங்களில் சித்தரிக்கப்படும் பல்வேறு விலங்குகள் மற்றும் பறவைகளை நாம் வணங்கும்போது, அணுத்துகள்கள் அத்தகைய உயிரினங்களின் பல்வேறு திறன்களை திறன்களை நமது மூளை அறைகளின் (மூளை செல்களின்) மீது பிரதிபலித்து, நமது ஆற்றலை அதிகப்படுத்துகின்றன.

**அணுத்துகள்களின் பிரதிபலிக்கும் இயல்பு, நினைவுகள் மற்றும் இதர திறன்கள்**

அணுத்துகள்களை நாம் வணங்காவிட்டாலும் கூட, அவை நம் வாழ்க்கையில் பல வகைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன:–

1. மரபணு மூலமாக வரும் அணுத்துகள்களின் நினைவுகள் மற்றும் பெற்றோர்களின் சிந்தனைகள் மூலமாக ஏற்படும் தாக்கம்.
2. அணுத்துகள்களின் பிரதிபலிக்கும் இயல்பு காரணமாக, நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு வண்ணங்கள் மூலம் ஏற்படும் தாக்கம்.
3. நமது சுற்றுப்புறத்திலுள்ள படங்கள், உருவங்கள், பொருட்கள், சின்னங்கள் மற்றும் சிலைகளின் இயல்புகளை அணுத்துகள்கள் பிரதிபலிக்கும்போது ஏற்படும் தாக்கம்.
4. மனிதர்களின் பெயர்களில் உள்ள அணுத்துகள் அதிர்வுகள் (பெயரியல் மற்றும் எண் கணிதவியல்) மூலம் ஏற்படும் தாக்கம்.
5. கிரகங்களின் அணுத்துகள் அடிப்படையிலும் (ஜோதிடம்), இயற்கை கற்கள் (இரத்தினவியல்) அடிப்படையிலும் ஏற்படும் தாக்கம்.
6. ஒரு வீட்டில் உள்ள அணுத்துகள் மற்றும் மின்காந்த அலை ஓட்டத்தின் மூலம் மனிதர்களின் மனநிலையில் (வாஸ்து) ஏற்படும் தாக்கம்.
7. சாபம், தாந்த்ரீகம், தீய சக்தி போன்ற அணுத்துகள்களின் அழிவு சக்திகள் மூலம் ஏற்படும் தாக்கம்.

நமது வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டங்களை நாம் எதிர்காள்ள வேண்டியுள்ளது என்பதை நாம் நன்கறிவோம். முக்தி நிலையை (அழிவற்ற வாழ்வு) அடைய வேண்டுமென்ற குறிக்கோளுடன் இருக்கும் மனிதர்கள், வானத்தில் சொர்க்கம் என்ற இடத்தில், நமது ஆத்மா வசிப்பதற்கு இடம் கிடைக்கும் என்றெல்லாம் கற்பனை செய்து கொள்ளக் கூடாது. நமது ஆத்மாவிற்கு, பூமியில் பாதுகாப்பாக தங்குவதற்கு ஒரு இடமும், தொடர்ச்சியான ஊட்டமும்தான் தேவைப்படுகிறது. அவற்றை வழங்கும் ஆற்றல், நம்மருகேவுள்ள கோவில்களில் வசிக்கும் அழிவற்ற மனித ஆத்மாக்கள் மூலமாகவும், அங்கு செய்யப்படும் சக்தியூட்டும் சடங்குகள் மூலமாகவும்தான் நமக்கு கிடைக்கும். அவர்களிடமிருந்துதான், அணுத்துகள்களை கையாளும் திறனை நாம் பெற்று, உறுதியான மரணமற்ற ஆத்மாவாக நிலைத்து நின்று, நமது மறுமை வாழ்வில் தெய்வீக ஆத்மா என்ற நிலைக்கு உயரமுடியும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.



சூரிய குடும்பமும், ஒன்பது கிரகங்களும் தெய்வங்களாக வழிபடப்படுகின்றன

# முகப்புரை

**இந்நாள் உங்களுக்கெல்லாம் நன்னாளாக இருக்கட்டும்.** தெய்வங்களை வணங்குபவர்கள், மரணத்திற்கு பிந்தைய வாழ்வில், தெய்வங்களோடு சேர்ந்து வாழ வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர். ஆனால், மரணத்திற்கு பின்னர், அப்படி ஒரு வாழ்வு இருக்கிறது என்பது வெறும் நம்பிக்கைதானா ? அல்லது அது உண்மைதானா ? என்பது குறித்து யாருக்கும் தெளிவான கருத்து கிடையாது. மனிதனும், மனித வாழ்வும் நமது ஸ்தூல உடலை பொறுத்தவரையில் எப்படி உண்மையோ, அதேபோல, நமது ஆத்ம சக்தி ரூபத்தை பொறுத்தவரையில், மறுமை வாழ்வும், அது தொடர்புடைய சவால்களும் இருப்பது உண்மைதான். பெரும்பான்மை மக்களின் ஆத்ம சக்தி, காற்றில் கலந்து விடுகின்றன. ஆனால், சிலர் மட்டும் தங்களது ஆத்ம சக்தியை உறுதியாக சிதறாமல் வைத்து கொண்டு அழிவற்ற மறுமை வாழ்வை வாழ்கின்றனர். இப்படிப்பட்ட சூழலில், ஒரு மனிதனின் ஆத்மா, ஏற்கனவேவுள்ள அழிவற்ற மனித ஆத்மாக்களின் உதவியோடு எப்படி அழிவற்ற நிலையை எய்துவது என்பது குறித்தும், மறுமை வாழ்வின் இரகசியங்கள் குறித்தும் இப்புத்தகம் விஞ்ஞானபூர்வமான அடிப்படையில் விளக்குகின்றது.

பல்வேறு ஆன்மீக பெரியவர்கள், ஜோதிடர்களோடு விவாதிப்பது எனது வழக்கம். பல்வேறு குருமார்களிடமிருந்து நான் பெற்ற ஒட்டுமொத்த அறிவை வைத்து கொண்டு நான் தொன்மையான தெய்வங்களை, அக்னி பூஜைகள் (சடங்குகள்) மூலம் வணங்க ஆரம்பித்தேன். பிரபஞ்ச சக்திகள் (அணுத்துகள்கள்) குறித்து புரிந்து கொள்வதற்கு, குருமார்களை விட, நான் செய்த அக்னி பூஜைகளே எனக்கு வழிகாட்டியது என்றால் அது மிகையாகாது. 24 ஆண்டுகளாக தொன்மையான தெய்வங்களுக்கு அக்னி பூஜைகள் செய்ததன் முடிவில், நான் தெய்வங்களிடமிருந்து பல பாடங்களை கற்றுக் கொண்டு ஆழமான அறிவை பெற்றேன்.

பிரபஞ்ச சக்தி என்பதை குறிக்க அணுத்துகள் என்ற பதத்தை நாம் தற்போது பயன்படுத்துகிறோம். எனது தெய்வீக அறிவை பயன்படுத்தி, அணுத்துகள் அடிப்படையிலான அனைத்து தெய்வீக இரகசியங்களையும் ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தி, அதன் வாயிலாக மறைந்துள்ள பல இரகசியங்களை தெரிந்து கொண்டேன். அந்த தெய்வீக இரகசியங்கள் அனைத்தும் இப்புத்தகத்தில் விஞ்ஞானபூர்வமாக விளக்கப்பட்டுள்ளன. அந்த விளக்கங்கள் யாவும், புராணங்கள், கட்டுக்கதைகள் அடிப்படையில் அல்லாமல், அணுத்துகள் இயல்புகளின் அடிப்படையிலேயே கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், அணுத்துகள்கள் (அணு, பிரபஞ்ச சக்தி அல்லது பிரம்மன் என்றும் அழைக்கப்படுகிறது) மற்றும் மனித ஆத்மாக்களின் அழிவற்றத்தன்மை ஆகியன குறித்த எளிய உண்மைகளை கூட தொன்மையான ஆன்மீக நூல்கள் எப்படி சிக்கலாக்கி விட்டன என்பதையும் என்னால் உணர முடிந்தது.

பெரும்பாலான பழைய நூல்கள், தெய்வங்களுக்கும் (அழிவற்ற மனித ஆத்மாக்கள்), அணுத்துகள்களுக்கும் (அணு) இடையேயான அடிப்படை வேற்றுமையை சரியான முறையில் விளக்கவில்லை. மனிதர்கள், மனித ஆத்மாக்கள், அழிவற்ற மனித ஆத்மாக்கள், தெய்வீக ஆத்மாக்கள், கிரகங்கள் அனைத்தும், நுண்ணிய அணுத்துகள்களால் ஆக்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில், பல முனிவர்கள், பல்வேறு பொருட்கள் மற்றும் ரூபங்கள் ஆகியவற்றில் பரந்து காணப்படும் அணுத்துகள்களையே சர்வ வல்லமை படைத்த தெய்வம் என்று தவறாக புரிந்து கொண்டுவிட்டனர்.

தெய்வங்களுக்கு அக்னி பூஜைகளை செய்ததன் மூலமே பல்வேறு தொன்மையான முனிவர்களும், ரிஷிகளும், தங்களது மரணத்திற்கு பிந்தைய வாழ்வில், தெய்வீக ஆத்மாக்கள் என்ற நிலைக்கு உயர்ந்துள்ளனர். அப்படிப்பட்ட அக்னி பூஜையை நான் கடந்த 15 ஆண்டுகளாக, ஒரு நாள் கூட விடாமல், தொடர்ந்து தீவிரமாக செய்து வருகிறேன். அதற்காக நான் இரண்டு அர்ச்சகர்களை நிரந்தரமாக நியமனம் செய்துள்ளேன். இப்போதெல்லாம், அத்தகைய தீவிரமான சடங்குகள், பிரபலமான கோவில்களில் கூட செய்யப்படுவதில்லை என்பதே உண்மை. எனது அக்னி ஹோமகுண்டத்திலிருந்து வெளிப்படும் சக்திகள், படிப்படியாக பல்வேறு உயர்நிலை தெய்வங்களை அடைந்து, அதன் விளைவாக அவர்களோடு எனது பிரபஞ்ச சக்தி தொடர்பு ஆழமாக வேரூன்றியது. ஆகவே, நான் பல்வேறு அணுத்துகள் அதிர்வுகளை கேட்பதற்கும், உணர்வதற்கும் வேண்டிய பிரபஞ்ச சக்திகளை அத்தெய்வங்கள் எனக்கு அருளினர். குறிப்பாக, நான் தீவிரமாக அக்னி பூஜைகளை செய்யும்போது, தெய்வீக குரலை கேட்பதற்கான சக்தியை எனக்கு அருளினர்.

நான் ஒரு பொறுப்புள்ள குடும்ப தலைவன். பல்வேறு தெய்வீக ஆத்மாக்களை, சக்தியூட்டும் சடங்குகள் மூலம் வணங்குவதை நான் எனது வாழ்க்கையின் அங்கமாக கொண்டுள்ளேன். எனது தோற்றம், ஒரு ஆன்மீக தலைவருக்குரிய தோற்றமாக இருக்காது. நான் எந்த ஒரு குறிப்பிட்ட வண்ண ஆடையையோ அல்லது தாடியையோ வைத்துக் கொள்ளவில்லை. அதிநவீன மனிதனாகிய நான், தினமும் எனது வீட்டில் பல தெய்வீக ஆத்மாக்கள், மறுமை வாழ்வில் சகல வசதிகளோடு கூடிய வாழ்வை வாழ்வதற்கு பூஜைசெய்து வருகிறேன். பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் பழைய கதைகளால் நான் அவ்வளவு சீக்கிரம் திருப்தியுற மாட்டேன் என்பதால், அக்னி பூஜைகள் செய்யும்போது பல கேள்விகளை நான் அவர்களிடம் எழுப்பினேன். அப்போது, பல்வேறு தெய்வங்கள் மூலம் பல்வேறு அழிவற்ற மனித ஆத்மாக்கள் பற்றியும், அப்படி அழிவற்ற நிலையை அடைவதற்கு வேண்டிய ஆற்றல் பற்றியும் நான் அறிந்து கொண்டேன்.

எந்த விஷயத்தையும், அணுத்துகள்கள் (அணுக்கள்) அடிப்படையில் தர்க்கரீதியாக சிந்திப்பது குறித்தும், ஒரு கருத்து தொன்மையான ஆன்மீக நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற ஒரே காரணத்திற்காகவே எதையும் குருட்டுத்தனமாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதையும் தொன்மையான தெய்வங்கள், எனக்கு கற்று தந்தன. இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மைகள், நடைமுறை அறிவு அடிப்படையிலேயே சொல்லப்பட்டுள்ளன. கடந்த 3000 ஆண்டுகளாக, அணுத்துகள்களுக்கும், அழிவற்ற தெய்வீக ஆத்மாக்களுக்கும் உள்ள வேறுபாட்டை முனிவர்கள் சரியாக உணரவில்லை. தெய்வங்களின் ஆற்றல்கள் என்ன என்பது குறித்து அவர்களுக்கிடையே குழப்பமே நிலவியது. தெய்வங்கள் மனிதர்களாக பிறந்தது பற்றி நாம் பல கதைகளை படித்துள்ளோம். ஆனால், உண்மையில், மரணத்திற்கு பின்னர், ஒரு மனித ஆத்மா, அழிவற்ற மனித ஆத்மாவாக நிலைத்திருக்க முடியும். அந்த நிலையைதான், ‘தெய்வம்’ அல்லது ‘தெய்வீக ஆத்மா’ அல்லது ‘அழிவற்ற ஆத்மா’ என்றெல்லாம் நாம் அழைக்கிறோம்.

இத்தகைய மனித ஆத்மாக்கள், மறுமை வாழ்வில், அணுத்துகள்களை கையாளுவது எப்படி என்பதை கற்று கொண்டு, அதன் மூலம் தங்களை வணங்கும் பக்தர்களுக்கு அருள் வழங்குகின்றன. மறுமை வாழ்வின் உண்மைகளை அறிந்து கொண்ட மனிதர்கள், ஆத்ம சக்தி ரூபத்தில், தெய்வ நிலையை எய்துகின்றனர் என்ற எளிய உண்மையை ஏற்று கொள்வதற்கு பதிலாக, தெய்வங்கள் மனிதர்களாக பிறக்கின்றனர் (அவதாரம் அல்லது மறுபிறவி) என்ற கருத்தை எப்படியோ மனிதர்கள் வளர்த்து கொண்டு விட்டனர். மனிதர்கள் இறந்த பிறகு, இறந்த உடலிலிருந்து, மனித ஆத்மா உருவாவது என்பது தானாக நடைபெறும் ஒரு இயற்கையான விஷயமாகும். உடலிலுள்ள ஒவ்வொரு உயிரணுக்களிலும், அந்த உயிரணுவின் வாழ்வாற்றல் என்று சொல்லப்படும் ஒரு ஆற்றல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. அவை தங்களுக்கிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தி கொள்கின்றன.

உடலிலுள்ள அனைத்து உயிரணுக்களிலும் உள்ள இந்த கண்ணுக்கு தெரியாத அணுத்துகள்கள், மரணம் சம்பவித்த பிறகு, உடலிலிருந்து வெளியேறி, மனித ஆத்ம சக்தியை, மனித உருவத்தில், ஆனால் கண்ணுக்கு தெரியாத வகையில், உருவாக்குகின்றது. ஆனால், இந்த மனித ஆத்ம சக்தி என்பது, மனித இதயத்தின் நடுப்பகுதியிலிருந்து ஒரு ஒளியாக வெளியேறுகிறது என்று யாரும் கற்பனை செய்து கொள்ள வேண்டாம்.



இதயத்திலிருந்து மனித ஆத்ம சக்தி வெளியேறுகிறது என்ற மனிதனின் கற்பனையை சித்தரிக்கும் படம்



முழு உடலிலிருந்து மனித ஆத்மா உருவாவதை சித்தரிக்கும் படம்

மனித உடலின் அனைத்து உயிரணுக்களிலும் உள்ள இந்த கண்ணுக்கு தெரியாத அணுத்துகள்கள், மரணத்திற்கு பின்னர் உடலை விட்டு வெளியேறி மனித ஆத்ம சக்தியை உருவாக்குகின்றது. அப்படி உருவாகும் ஆத்ம சக்தியின் பலம், இறந்த மனிதரின் மனோசக்தி, அவருக்கு இருக்கும் பல்வேறு அணுத்துகள் அடிப்படையிலான திறன்கள் பற்றிய நினைவுகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். ஆத்ம சக்தியின் உருவம் என்பது, இறந்த மனிதனின் அதே உயரம் மற்றும் இதர உடல் அடையாளங்களை கொண்டிருக்கும். உங்களது ஆத்ம சக்தியின் உருவம் என்பது, கண்ணாடியில் உங்கள் உருவத்தை பார்த்தால் எப்படியிருக்குமோ அதன் மறுவடிவமாகவே இருக்கும். ஆனால், ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் அது கண்ணுக்கு தெரியாத ரூபத்தில் இருக்கும். மனித உடலில் பல நூறு கோடி அணுத்துகள்கள் இருப்பதால், அது கண்ணுக்கு தெரிகின்ற வகையில் இருக்கிறது. மனித ஆத்மாவில் சில கோடி அணுத்துகள்கள் இருந்தாலும் அது கண்ணுக்கு தெரிவதில்லை. மனித ஆத்மா என்பது சூட்சும உலகில் புதிதாய் பிறந்த குழந்தையைப் போன்றதுதான். ஆகவே அதன் சக்தி குறைவாகவே இருக்கும்.

ஒரு மனித ஆத்மாவுக்கு தங்க பாதுகாப்பான இடமும், சடங்குகள் மூலம் கிடைக்கும் உணவும், இதர அழிவற்ற ஆத்மாக்களின் ஆதரவும் கிடைத்தால்தான், அது மறுமை வாழ்வில் நிலைத்திருக்க முடியும். உணவு சக்தி இல்லாத மனித ஆத்மா, நீண்ட காலம் நிலைத்திருக்க முடியாமல், 3 அல்லது 6 மாதத்திற்குள் காற்றில் சிதறிவிடும். சில மனித ஆத்மாக்கள், ஏற்கனவே உள்ள அழிவற்ற ஆத்மாக்கள் மற்றும் சடங்குகளின் உதவியோடு காற்றில் சிதறிவிடாமல், உறுதியாக நிலைத்திருக்கும். ஒரு மனித ஆத்மா, காற்றில் சிதறி கரைந்து விடாமல், கண்ணுக்குப் புலனாகாத மனித வடிவில் உறுதியாக இருந்தால், அந்த நிலைதான் முக்தி நிலை, மோட்ச நிலை என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், இதையெல்லாம் உரிய முறையில் புரிந்து கொள்ளாமல், பல ஆன்மீக தலைவர்கள், ஆத்மா காற்றில் சிதறிவிடுவதையே முக்தி நிலை என்று வர்ணிக்கின்றனர்.



மனித ஆத்ம சக்தி, கண்ணுக்கு தெரியாத மனித உருவில் இருப்பதை சித்தரிக்கும் படம்

அப்பாவி மக்கள், தெய்வம் ஒன்றுதான் என்றும், அந்த ஒரு தெய்வம்தான் இந்த மொத்த பிரபஞ்சத்தையும் படைத்தது என்றும் நம்புகின்றனர். அணுத்துகள் எல்லாயிடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளது, அது பிரபஞ்சத்திலுள்ள அனைத்து உயிரினம் மற்றும் ஜடப்பொருட்களின் தோற்றத்திற்கும் காரணமாகவுள்ளது. அந்த அடிப்படையில்தான், தெய்வம் ஒன்றுதான் என்று மக்கள் நம்புகின்றனர். அணுத்துகள்கள் (அணுக்கள்) தனிப்பட்ட முறையில் மிகச்சிறிய அளவில் இருந்தாலும், அவை ஒன்றாக திரளும்போது, நாம் இவ்வுலகில் காணுகின்ற பல பொருட்களை அது உருவாக்குகின்றது.

நட்சத்திரம், கிரகங்கள், மனிதர்கள், விலங்குகள், பூமியில் உள்ள பஞ்ச பூதங்கள் என்று அனைத்திலும் அணுத்துகள்களே உள்ளன. அந்த அடிப்படையில்தான், முற்காலத்தில் வாழ்ந்த முனிவர்களும், ரிஷிகளும், ஒரே ஒரு மகத்தான தெய்வம்தான் இந்த மொத்த உலகத்தையும், அதிலுள்ள அனைத்து உயிரினங்களையும் படைத்தது என்று நம்பினர். அதே அடிப்படையில்தான், தெய்வம் எங்கும் நிறைந்துள்ளது, சர்வ வல்லமை படைத்துள்ளது என்ற கருத்துக்களை மனிதகுலம் வளர்த்து கொண்டது. எங்கும் நிறைந்த அணுத்துகள்களையே தெய்வம் என்று அவர்கள் தவறாக கற்பனை செய்து கொண்டனர்.

அழிவற்ற மனித ஆத்மாக்களையே சிலர் தெய்வமாக வணங்கினர். அந்த ஆத்மாக்கள், தங்கள் மனித வாழ்வில் பெற்ற வெற்றிகள், அணுத்துகள் திறன்கள் போன்றவையே புராண கதைகளாக சொல்லப்பட்டன. ஆத்ம ரூபத்திலுள்ள பல தெய்வீக ஆத்மாக்கள், தங்களது மனித வாழ்வு நினைவுகளுடனே இருந்து வருகின்றன. அந்த அழிவற்ற ஆத்மாக்களை வணங்குவதற்கு பயன்படுத்தப்படும் பல தெய்வீக பெயர்கள் மற்றும் பட்டங்கள், அவர்களது அணுத்துகள் கையாளும் திறன்களின் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன. அத்தகைய தெய்வீக பட்டங்கள்/ பெயர்கள் குறித்து இப்புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளன. ஒரு மனித ஆத்மா, சடங்குகள் மூலமும், ஏற்கனவேவுள்ள தெய்வீக ஆத்மாக்களின் உதவியின் மூலமுமே அழிவற்ற ஆத்ம நிலைக்கு உயரமுடியும். அதேபோல, பல்வேறு தெய்வீக ஆத்மாக்களை வணங்குவதன் மூலம், அணுத்துகளை கையாளும் பல்வேறு திறன்களை நாம் கற்றுக் கொள்ளலாம்.

சிலர், எங்கும் நிறைந்துள்ள அணுத்துகள்களையே தெய்வம் என்று வணங்கி அதற்கு பிரபஞ்ச சக்தி, பிரம்மன், சர்வ வல்லமை பெற்ற தெய்வம் போன்ற பெயர்களையிட்டு அழைத்தனர். ஆற்றலை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது என்பது அறிவியல். எனவே இந்த அணுத்துகள்களை யாரும் உருவாக்கவில்லை. சர்வ வல்லமை படைத்த ஏதோ ஒரு கடவுள்தான் இவற்றை உருவாக்கினர் என்பது அறிவியல் பூர்வமான உண்மை அல்ல. பல்வேறு சக்திகளையும், இயல்புகளையும் பெற்றுள்ள இத்தகைய அணுத்துகள்களை நாம் வணங்கும்போது, நமது திறன்களும், ஆற்றல்களும் அதிகரிக்கின்றன.

பல்வேறு தெய்வங்களையும், அணுத்துகள்களையும் அக்னி பூஜையின் மூலம் வணங்கியதன் மூலம், அவற்றின் சக்திகள் என்ன ? என்பதை நான் அறிந்து கொண்டேன். அனைத்து தெய்வங்களுக்கும் ஒரே மாதிரியான திறன்கள் இருப்பதில்லை. பல்வேறு தெய்வங்கள், பல்வேறு கோவில்களில், பல்வேறு பெயர்கள் மூலம் வணங்கப்பட்டாலும், மனிதர்களை பொறுத்தவரையில் அனைத்து தெய்வங்களும் ஒன்றுதான் என்றே நம்புகின்றனர். ஆனால் இப்பிரபஞ்சத்தில், குறிப்பாக இந்த பூமியில், **ஒரே ஒரு தெய்வம் மட்டுமே இல்லை** என்பதும், தெய்வங்கள் எப்போதுமே தெய்வீக பரிவாரம் / குடும்பம் என்ற அடிப்படையில் குழுவாகவே வாழ்கின்றன என்பதும்தான் உண்மை. ஒரு நிறுவனத்தில், தலைவர், உதவி தலைவர், பொது மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் என்று பலர் இருப்பதைப்போல, முக்கிய கோவில்களில் இருக்கும் தெய்வங்களின் கீழும், உயர்நிலை தெய்வங்கள், மூன்றாம் நிலை தெய்வங்கள், கிராம தெய்வங்கள், காவல் தெய்வங்கள் ஆகியோரை கொண்ட தெய்வீக பரிவாரம் ஒன்று செயல்படுகிறது. அவர்கள்தான், கோவில் அமைந்துள்ள மண்டலத்தில் (ஊரில்) வாழும் பக்தர்களுக்கு அருள் வழங்குவார்கள்.

ஒரு பெரிய கோவிலில், தெய்வங்கள் ஒரு குழுவாக, தெய்வீக குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர். ஒரு கோவிலின் விஸ்தீரணம், கர்ப்பகிரகத்தில் உள்ள வசதிகள் ஆகியவற்றை பொறுத்தே, அங்குள்ள தெய்வங்களின் எண்ணிக்கையும் இருக்கும். அதேபோல, பல்வேறு தெய்வங்களின் அருள் வழங்கும் சக்தி என்பது, அணுத்துகள்களை கையாளும் அவர்களது திறன்கள் மற்றும், அவர்கள் வீற்றிருக்கும் கோவில்களில், பக்தர்கள் செய்யும் சக்தியூட்டும் பூஜைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்கும். பல்வேறு தெய்வங்கள் மற்றும் அவர்களது அணுத்துகள் சக்திகளை பற்றி நான் தெரிந்து கொண்டபோது, ஒவ்வொரு தெய்வமும், மற்ற தெய்வத்திடமிருந்து எப்படி மாறுபடுகிறது என்பதையும், மந்திரங்கள் எனப்படும் அணுத்துகள் அதிர்வுகளின் அடிப்படையில் அவர்களது தெய்வீக ஆற்றல் எப்படி செயல்படுகிறது என்பதையும் நான் அறிந்து கொண்டேன்.

பல்வேறு தெய்வீக ஆத்மாக்களின் அழிவற்ற வாழ்வு என்பது அவர்கள் மனித வாழ்க்கையில் இறந்து சில நூறு ஆண்டுகளிலிருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வரையில் இருக்கும். அவர்களது அழிவற்ற வாழ்வு எவ்வளவு ஆண்டுகள், அவர்களது தனிப்பட்ட அணுத்துகள் கையாளும் திறன்கள், அவர்கள் கீழ் செயல்படும் தெய்வீக பரிவாரம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் அவர்களது தெய்வீக நிலை நிர்ணயிக்கப்படுகிறது. அத்தகைய தெய்வீக ஆத்மாக்கள் பல்வேறு கோவில்களில் வசித்து வருகின்றன என்றாலும், அவர்களது எண்ணிக்கை குறைந்த அளவிலேயே உள்ளது. அழிவற்ற மனித ஆத்மாக்களை (தெய்வீக ஆத்மாக்கள்) தவிர, வேறு பல அழிவற்ற மனித ஆத்மாக்களும், மயானங்கள், காடுகள், மலைகள் போன்ற பகுகளில் அலைந்து கொண்டிருக்கின்றன. தற்காலிகமான, உருவம் சிதைந்த நிலையில் காணப்படும் மனித ஆத்மாக்கள்தான், பேய்கள் என்று அழைக்கப்படுகின்றன.

மனிதர்களில், நல்லவர்கள், தீயவர்கள், தந்திரம் மிக்கவர்கள், பலவீனமானவர்கள், பலசாலிகள், ரவுடிகள், கொலைகாரர்கள் என்று பலவகைப்பட்டவர்கள் உள்ளனர். அதேபோல, மனித ஆத்மாக்களிலும், அவர்களுக்குள்ள நல்ல மற்றும் தீய இயல்புகளின் அடிப்படையில், தெய்வங்கள், தீய ஆனால் அழிவற்ற மனித ஆத்மாக்கள் (துஷ்ட தேவதைகள்), தீய சக்திகள், பேய்கள், தீய ஆத்மாக்கள் என்று பல வகைகள் உள்ளன. மனித ஆத்மாக்கள், எங்கு வசிக்கின்றன என்பதை வைத்தே அவர்களது மறுமை வாழ்வு எந்த நிலையில் இருக்கிறது என்பதை நாம் சொல்லிவிடலாம். கோவில்களில் அவை வாழும்போது, அவற்றுக்கு தெய்வீக ஆத்மா என்று பெயர். அவற்றைத்தவிர, இன்னும் பல மனித ஆத்மாக்கள், தங்குவதற்கு இடமின்றி நம்மைச் சுற்றி அலைந்து கொண்டிருக்கின்றன. அவை பொதுவாக, சுடுகாடுகள், தெருக்கள், பாழடைந்த கட்டடங்கள் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும்.

இறந்த விலங்குகளிலிருந்து வெளிப்படும் அணுத்துகள்கள்தான் (அணுக்கள்) தீய சக்திகள் என்று அழைக்கப்படுகின்றன. இத்தகைய அணுத்துகள்கள் நம்மைச் சுற்றி எப்போதும் இருக்கின்றன. நமது சுற்றுப்புறங்களில் சுற்றிக் கொண்டிருக்கும் அவற்றை, தாந்த்ரீக மந்திரவாதிகள், ஒரு மனிதருக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கில் ஏவிவிடுவார்கள். கெட்ட மனித ஆத்மாக்கள், துஷ்ட தேவதைகள் என்று அழைக்கப்படுகின்றன. ஒரு நல்லியல்பு கொண்ட மனிதர் முக்தியடையும்போது, அவரது ஆத்மாவுக்கு, கோவிலில் மூத்த தெய்வீக ஆத்மாவின் கீழ் வாழ்வதற்கு இடம் கிடைக்கிறது. அத்தகைய நல்ல ஆத்மாக்கள்தான், பரிவார தெய்வங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஒரு தீய மனிதனின் ஆத்மாவால், தனது சொந்த முயற்சியின் அடிப்படையிலேயே நீண்டகாலம் ஆத்ம வடிவில் இருக்க முடியும் என்றாலும், அந்த ஆத்மாவை யாரும் மதிக்கவோ அல்லது வணங்கவோ மாட்டார்கள். மறுமை வாழ்வில் வாழ்வதற்கு அவற்றுக்கு நிரந்தரமாக இடமும் கிடைக்காது. ஆகவே, விரக்தியடைந்த அந்த ஆத்மாக்கள், மனவேதனை அடைந்து துஷ்ட தேவதைகளாக (தீய ஆத்மாக்கள்) மாறிவிடுகின்றன.



ஒரு மனித ஆத்மாவின் தலைப்பகுதியில் ஏற்படும் அணுத்துகள்களின் இணைப்பு



ஒரு பலவீனமான மனித ஆத்மாவுக்கு படிப்படியாக ஏற்படும் அணுத்துகள்கள் இழப்பு

ஒரு மனித ஆத்மாவின் மனிதனைப் போன்ற அதன் சக்தி வடிவத்திற்கும் அதன் அணுத்துகள்களுக்கும் வேறுபாடு உள்ளது. ஒரு மனித ஆத்மாவுக்குள் இருக்கும் அணுத்துகள்கள், அவற்றிக்கிடையேவுள்ள இணைப்பின் காரணமாக, ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்ள முற்படும். ஆத்மாவின் அணுத்துகள்களுக்கிடையே உள்ள இந்த சக்தி இணைப்பு என்பது அவற்றின் மனித வாழ்வின்போதே ஏற்பட்டு விடுகிற ஒன்று. ஆனால், பலத்த காற்று போன்ற இயற்கை சக்திகள் காரணமாக, இந்த சக்தி இணைப்புக்கு பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, மனித ஆத்மாக்கள், மெதுவாக தனிப்பட்ட அணுத்துகள்களாக சிதறி, காற்றோடு அல்லது இப்பிரபஞ்சத்தோடு கலந்துவிடுகின்றன. இந்நிலையைத்தான், மரணத்திற்கு பின்னர், ஒரு மனித ஆத்மாவுக்கு ஏற்படும் மரணம் என்று குறிப்பிடப்படுகிறது. இறந்த உடலிலிருந்து வெளிப்படும் அணுத் துகள்கள், ஏதாவது ஒரு உயிரினமாக மறுபிறப்பு எடுக்கும் அல்லது ஜடப்பொருளாக மாறிவிடும். பல முனிவர்கள், பிரபஞ்சத்தையும் அதன் சக்தி துகள்களையுமே சர்வ வல்லமை படைத்த தெய்வமாக கற்பனை செய்து கொண்டனர். இறந்த உடலிலிருந்து வெளிப்பட்டு திறந்த பிரபஞ்சவெளியில் சிதறுகின்ற அணுத்துகள்களைத்தான், அவர்கள் மனித ஆத்மா தெய்வத்தோடு கலந்து விடுகிறது அல்லது முக்திநிலையை அடைகிறது என்று கற்பனை செய்து கொண்டார்கள்.



மனித ஆத்மாவிலிருந்து வெளியேறும் சக்தி துகள்கள், மெதுவாக காற்றோடு அல்லது பிரபஞ்சத்தோடு கலந்துவிடுவதை சித்தரிக்கும் படம்

முக்திநிலை என்றால் இறந்த பின்னர் கண்ணுக்குப் புலனாகாத மனித வடிவில் இருக்கும் ஆத்மா சிதறி பிரபஞ்சத்தில் அணுத்துகள்களாக கரைந்துவிடாமல், தனது மனித வாழ்வு நினைவுகளோடு உறுதியாக நிரந்தரமாக இருப்பது என்று பொருள். மனித ஆத்ம சக்தி, படிப்படியாக சிதறிவிடும்போது, அது உருக்குலைந்த சூட்சம மனித வடிவமாக மாறிவிடுகிறது. அந்த நிலையைத்தான் பேய் என்று குறிப்பிடுகிறோம். ஆனால், சிதறி விடுகின்ற மனித ஆத்ம சக்தியில் உள்ள அணுத்துகள்களுக்கு இறப்பு என்பது இல்லை. தனிப்பட்ட சக்தி துகள்களாக தொடர்ந்து நீடித்திருக்கும். அவைகளுக்கு ஒரு குறிப்பிட்ட மனிதனின் நினைவுகள் இருக்கும். அவற்றில் சில, புற்கள், புழுக்கள், மரங்கள் போன்ற பல்வேறு உயிர் ரூபங்களாக பூமியில் மறுபிறப்பு எடுக்கின்றன. வேறு சில ஆத்மாக்கள், காற்றில் அணுத்துகள்களாக சுற்றிக் கொண்டிருக்கும்.

முற்கால முனிவர்கள், அணுத்துகள்களை, பிரபஞ்ச சக்தி அல்லது பிரம்மன் என்றும், அது குறித்த அறிவை, பிரம்ம ஞானம் என்றும் குறிப்பிட்டனர். பிரம்ம ஞானம், ஆழிவற்ற மனித ஆத்மாக்கள், அணுத்துகள்களின் இரகசியங்கள் பற்றி கடந்த 3000 ஆண்டுகளாக யாரும் தெளிவான விளக்கங்களை எடுத்து கூறவில்லை. ஆகவே, அவை பற்றி வாசகர்கள் சரியான வகையில் புரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில், அது பற்றிய அடிப்படையான கருத்துக்களை இப்புத்தகத்தில் விளக்கி கூறியுள்ளேன். மேலும், தெய்வங்களும் (அழிவற்ற மனித ஆத்மாக்கள்), அணுத்துகள்களும், இப்பிரபஞ்சத்தில், குறிப்பாக இந்த பூமியில், எப்படி செயல்படுகின்றன என்பதையும், மனிதகுலம் அத்தகைய தத்துவங்களை தனித்தனியாக புரிந்து கொள்ளாமல், எப்படி அதிலிருந்து விலகிச் சென்றுள்ளது என்பதையும் இப்புத்தகம் விளக்குகின்றது.

இப்புத்தகத்தில், அணுத்துகள்களின் பல்வேறு இயல்புகள் மற்றும் திறன்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. அணுத்துகள்கள் நமது சுற்றுப்புறத்தில், எப்படி தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பதையும், படங்கள், சிலைகள், விக்கிரங்கள், உடலில் பச்சை குத்தப்படுவது போன்றவைகள் மூலம் அணுத்துகள்கள் எவ்வாறு நம்மீது தாக்கம் ஏற்படுத்துகிறது என்பதையும் விளக்கப்பட்டுள்ளன. அணுத்துகள்களின் பிரதிபலிப்பு மற்றும் அவை நமது மூளையில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை நீங்கள் படிக்கும்போது, அணுத்துகள் சக்திகள், அழிவற்ற மனித ஆத்மாக்கள் ஆகியவை பின்னால் உள்ள தாக்கம் என்ன என்பதை புரிந்து கொள்ள திறந்த மனதோடு, சுதந்திரமான மனநிலையில் படிக்க வேண்டும். இப்பிரபஞ்சமும், அணுத்துகள்களும், தெய்வங்களும் மனிதகுலத்தை சேர்ந்த அனைவருக்கும், எல்லாவிதமான உதவியையும் செய்ய தயாராக உள்ளன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மரணத்திற்கு பின்னர் என்ன நடக்கிறது ? மனித மூளையின் மூலம் உருவாகும் ஆத்ம சக்தி, மூளையின் நினைவாற்றல் ஆகியவை குறித்த சந்தேகங்கள் பலவற்றுக்கு பல்வேறு தொன்மையான தெய்வங்கள் எனக்கு விளக்கங்களை அளித்தன. மனித ஆத்மாக்களின் பல்வேறு நிலைகள், தெய்வீக ஆத்மாக்களின் உதவியில்லாமல் வாழும் மனித ஆத்மாக்கள் ஆகியவை பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. மேற்படி கேள்விகளுக்கான பதில்களை, இதுவரையில் எந்த ஆன்மீக நூல்களும் மக்களுக்கு தெரிவிக்கவில்லை. ஆத்ம சக்தி ரூபத்தில் அழிவற்ற வாழ்க்கை வாழ வேண்டுமென விருப்பப்படும் ஒவ்வொரு மனிதனும், ஞானத்தின் உச்சம் என்று சொல்லக்கூடிய அந்த இரகசியங்கள் குறித்து, தெரிந்து கொள்வது அவசியம். உலகம் முழுவதும், வெவ்வேறான மரண சடங்கு (புதைப்பது, எரிப்பது) முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. சமூக சேவை என்ற பெயரில், ஒருவர் இறந்தவுடன் அவரது கண் போன்ற உடல் பாகங்கள் அகற்றப்பட்டு, உயிரோடு இருக்கும் மற்றவர்களுக்கு உறுப்பு தானமாக வழங்கப்படுகிறது. இறந்த உடலிலிருந்து உறுப்புக்களை அகற்றுவது அல்லது உடலை புதைக்காமல் எரித்துவிடும் வழக்கத்தை பிற்பற்றுவதால், இறந்த உடலுக்கு ஏற்படும் சேதமும், அதற்கேற்ப அணுத்துகள்களுக்கு ஏற்படும் சேதமும், மனித ஆத்ம சக்தி உருவாக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

முக்தி நிலையை எய்த வேண்டும், அழிவற்ற வாழ்வை வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழும் மனிதர்களுக்கு, அணுத்துகள் இரகசியங்களை தெரிந்து கொள்வது என்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். முற்காலத்தில், அரசர்கள் மற்றும் மகத்தான ஆன்மீக தலைவர்கள் இறக்கும்போது, அவர்களது உடல் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும். அந்த நிலையை சமாதி நிலை என்று அழைப்பார்கள். இந்த பாதுகாப்பான புதைக்கும் முறை, ஆத்ம சக்தி உருவாக்கம் சிறப்பாக நடைபெறுவதற்கு அவர்களுக்கு பெரிதும் உதவியது. காலப்போக்கில், அத்தகைய மனித ஆத்மாக்களுக்கு சடங்குகள் செய்யப்பட்டு, உணவும் படைக்கப்பட்டு சக்தியூட்டப்பட்டன. பின்னர், சமாதியடைந்த அந்த இடங்கள், வழிபாட்டு தலங்களாகவும் மாற்றப்பட்டன.

மனித உடலில் உள்ள உயிரணுக்களிடையேவுள்ள அணுத்துகள் இணைப்பு, மரணத்திற்கு பின்னர் மனித ஆத்ம சக்தி உருவாக்கத்திற்கு உதவுகிறது. அத்தகைய ஆத்ம சக்தியின் உறுதி என்பது – இறந்துவிட்ட அந்த குறிப்பிட்ட மனிதனின் மூளை உயிரணுக்களின் பல்வேறு நினைவாற்றல், மனித வாழ்வின்போது கற்றுக் கொண்ட பல்வேறு விஷயங்கள், அணுத்துகள் சக்தி மற்றும் மனித ஆத்மாவின் அழிவற்ற வாழ்வு, ஆத்ம சக்தியை உறுதியாகவும், நிரந்தரமாகவும் வைத்துக் கொள்ள உதவும் இதர வழிபாட்டு முறைகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். இவையெல்லாம் ஒரு சாதாரண மனிதனுக்கு இல்லாதபட்சத்தில், அவனது ஆத்ம சக்தி, தனிப்பட்ட அணுத்துகள்களாக சிதறி, பல்வேறு கீழ்நிலை உயிரினமாக மீண்டும் பிறப்பெடுத்துவிடும் அல்லது ஜடப்பொருளாக மாறிவிடும்.



முழு மனித உடலில், அணுத்துகள்களின் இணைப்பு ஏற்படுவதை சித்தரிக்கும் படம்



மனித உடலிலுள்ள உயிரணுக்களில் அணுத்துகள் (அணுக்கள்) இணைப்புஏற்படுவதை சித்தரிக்கும் படம்

பக்தர்களை பொறுத்தவரையில் அவர்களை மூன்று வகைகளாக பிரிக்கலாம். முதல் வகையை சேர்ந்தவர்கள், அழிவற்ற மனித ஆத்மாக்களை தெய்வமாக வணங்குபவர்கள். இத்தெய்வங்கள் பொதுவான தெய்வீக பெயர்களை கொண்டு அழைக்கப்படுகின்றன. பொதுவான பெயர்கள் இருப்பதால், ஒரே தெய்வம்தான் எல்லாயிடங்களிலும் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். பொதுவாக, தங்களுக்கு அருகாமையில் இருக்கும் கோவில்களில் உள்ள தெய்வங்களால்தான் பக்தர்கள் முக்திநிலையை அடையமுடியும். கோவிலின் விஸ்தீரணத்தை பொறுத்து, குறைந்தபட்சம் இரண்டிலிருந்து, அதிகபட்சமாக பத்து தெய்வீக ஆத்மாக்கள் ஒரு கோவிலில் வசிப்பார்கள். அவர்களுக்கு தலைமை வகிக்கும் தெய்வம், கோவிலின் மூலஸ்தானத்தில் வசிக்கும். பரிவார தெய்வங்கள் என்றழைக்கப்படும் மற்ற தெய்வங்கள், அதே கோவிலில் சிறிய கர்ப்பகிரகங்களில் வசிப்பார்கள். ஒரு பக்தரின் ஆத்மாவுக்கு முக்தி நிலையை அருளும் தெய்வம், தான் வசிக்கும் கோவிலின் அளவு மற்றும் இதர வசதிகளை பொறுத்து, அதே கோவிலில் வசிக்க அந்த ஆத்மாவுக்கு அனுமதியளிக்கும்.

இரண்டாவது வகையை சேர்ந்த பக்தர்கள், எங்கும் நிறைந்துள்ள அணுத்துகள்களை (அணுக்கள்), சர்வ வல்லமை படைத்த தெய்வமாக வணங்குவர். அணுக்களுக்கு, பிரபஞ்ச சக்தி, பிரம்மன் என்ற பெயர்களும் உண்டு. அணுக்கள் இப்பிரபஞ்சத்தில் எங்கும், எதிலும் உள்ளது. கண்ணுக்கு தெரிந்த மற்றும் தெரியாத அனைத்து பொருட்களிலும் உள்ள அணுத்துகள்கள், பல்வேறு செயல்களை செய்யும் திறனை பெற்றுள்ளன. மனிதர்கள் மற்றும் விலங்குகளின் செயல்களும், திறன்களும் பல்வேறு ரூபங்களில் உள்ள அணுத்துகள்களின் செயல்களாகத்தான் பார்க்கப்படவேண்டும். தனிப்பட்ட முறையில், இந்த அணுத்துகள்களால் குறைந்த எண்ணிக்கையிலான செயல்களை மட்டுமே செய்ய முடியும், ஆனால், அவை ஒன்றாக திரண்டு பெரிய வடிவத்தை எடுக்கும்போதும் அல்லது உயிரினமாக மாறும்போதும், அவற்றால் அதிக செயல்களில் ஈடுபட முடிகிறது. இப்பிரபஞ்சத்தில், அனைத்து உயிரினங்களும், ஜடப்பொருட்களும் இந்த நுண்ணிய அணுத்துகள்களால்தான் படைக்கப்படுகின்றன. அவற்றால்தான் எல்லா செயல்களும் நடைபெறுகின்றன. இந்த நுண்ணிய துகள்களால் எதையும் செய்ய முடியும், அனைத்தையும் செய்ய முடியும் என்பதால், பல ஆன்மீக தலைவர்கள் இந்த சக்தி துகள்கள்தான் (அணுக்கள்) சர்வ வல்லமை பொருந்திய தெய்வம் என்று நம்பி, அதையே வணங்க ஆரம்பித்து விட்டனர்.

அணுத்துகள்கள், இப்பிரபஞ்சத்தில், எல்லா இடங்களிலும் பல்வேறு ரூபத்தில் உள்ளன. நட்சத்திரங்கள், கிரகங்கள், பூமியாக அவை நம் கண்ணுக்கு தெரிகின்ற ரூபங்களில் உள்ளன என்றால், அவற்றிலிருந்து வெளிப்படும் கதிர்வீச்சுக்கள், அதிர்வுகள் போன்றவை கண்ணுக்கு தெரியாத ரூபங்களில் இருக்கின்றன. சில முனிவர்கள், நமது சூரிய குடும்பத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, சூரியனில் இருந்து வரும் சக்தி கதிர்வீச்சுக்களை (சூரிய தெய்வம் அல்லது சூரிய தேவன்), சந்திரனிலிருந்து வரும் சக்தி கதிர்வீச்சுக்கள் (சந்திர தெய்வம் அல்லது சந்திர தேவன்), செவ்வாயிலிருந்து வரும் சக்தி கதிர்வீச்சுக்கள் (அங்கார தேவன்), புதன் கிரகத்திலிருந்து வரும் சக்தி கதிர்வீச்சுக்கள் (புத தேவன்), வெள்ளி கிரகத்திலிருந்து வரும் சக்தி கதிர்வீச்சுக்கள் (சுக்கிர தேவன்), வியாழன் கிரகத்திலிருந்து வரும் சக்தி கதிர்வீச்சுக்கள் (பிரகஸ்பதி தேவன்), சனி கிரகத்திலிருந்து வரும் சக்தி கதிர்வீச்சுக்கள் (சனி தேவன்), பூமியில் உள்ள பல்வேறு தனிமங்களிலிருந்து வரும் சக்திகள் (பஞ்ச பூதங்கள்) என்று வகைப்படுத்தி அவற்றை வணங்கினர். சிலர், பஞ்ச பூதங்கள் எனப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயத்தை ந ம சி வா ய என்று வணங்கி வருகின்றனர்.

நாம் சுவாசிக்கும் பிராணவாயு ($O_2$) உள்ளிட்ட ஒவ்வொரு அணுத்துகள்களுக்கும் உயிர் உண்டு. நமது சுற்றுப்புறத்திலுள்ள சுதந்திரமாக மிதக்கும் அணுத்துகள்கள், நமது உடலுக்குள் சென்று, அதன் முந்தைய நினைவுகளின் அடிப்படையில் குறிப்பிட்ட இயல்புகளை நம்முள் தூண்டிவிடுகிறது. அணுத்துகள்கள், பல்வேறு நிறங்கள், அதிர்வுகள், சிலைகள் மற்றும் படங்களின் மூலம் நமது அன்றாட வாழ்வில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்பது குறித்தும் இப்புத்தகத்தில் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

அணுத்துகள்களை நாம் நீண்டகாலம் வணங்கி வரும்போது, பிரபஞ்சத்திலிருந்து, சுதந்திரமாக சுற்றித் திரியும் அணுத்துகள்களை நாம் நேரடியாக கிரகித்துக் கொள்ளும் திறனை பெறுவதற்கு அது உதவுகிறது. ஆகவே, ஒரு மனித ஆத்மா, தனது மறுமை வாழ்வில், பிரபஞ்சத்திலிருந்து அணுத்துகள்களை கிரகித்து கொண்டு, தானாகவே சிறிது காலம் உறுதியான ஆத்மாவாக நீடிக்க முடியும். ஆனால், அணுத்துகள்களை மட்டும் வணங்குபவர்களுக்கு, அவர்களது மறுமை வாழ்வில், அழிவற்ற தெய்வீக ஆத்மாக்களின் ஆதரவு எதுவும் கிடைக்காது.

மூன்றாம் வகை பக்தர்கள், சில ஆன்மீக தலைவர்கள் அல்லது சாதுக்கள் அல்லது முனிவர்களின் ஆத்மாக்களை வணங்குபவர்கள். அவர்களுக்காக பல இடங்களில் கோவில்களை கட்டுவார்கள். அணுத்துகள்களுக்கு பிரதிபலிக்கும் திறன் உள்ளதால், பக்தர் ஒருவர் மனித ஆத்மாவை வணங்கும்போது, அது அழிவற்ற ஆத்மாவாக உள்ளதோ, இல்லையோ, அதன் சிலையைச் சுற்றியுள்ள அணுத்துகள்கள், அந்த ஆத்மாவினுடைய மனித வாழ்வு இயல்புகளை, அதை வணங்கும் பக்தரின் மீது பிரதிபலித்து விடுகிறது. நாம் வணங்கும் ஒரு ஆன்மீக தலைவர், தனது மனித வாழ்வின்போது, அன்பு, கருணை போன்ற இயல்புகளை பெற்றிருந்தார் என்றால், அதே இயல்புகளை, அவரை வணங்கும் நமது மூளையறைகளிலும் அணுத்துகள்கள் தூண்டிவிடுகிறது. அதேபோல, ஒரு மனிதன் தன் வாழ்வில் துணிச்சல்மிக்கவராக இருந்தால், அந்த ஆத்மாவின் சிலையைச் சுற்றியுள்ள அணுத்துகள்கள், அந்த துணிச்சலை அவரது ஆத்மாவை வணங்கும் பக்தர் மீதும் பிரதிபலித்து விடுகிறது. அணுத்துகள்களின் பிரதிபலிக்கும் இயல்பு காரணமாகவே இப்படி நடைபெறுகிறது.

தொன்மையான தெய்வங்கள் என்று குறிப்பிடப்படும் அழிவற்ற மனித ஆத்மாக்கள் முதல் வகையை சேர்ந்தவர்கள். அவர்கள், மந்திரங்கள், அஷ்டமா சித்திகள் போன்ற பல்வேறு அணுத்துகள் இரகசியங்களை நன்கறிந்தவர்கள். மூன்றாம் வகையை சேர்ந்த மனித ஆத்மாக்கள், அழிவற்ற ஆத்மாவாகவும் இருப்பார்கள் அல்லது இல்லாமலும் இருப்பார்கள். அவர்களை சாதுக்களின் ஆத்மா என்று அழைக்கின்றனர். கடந்த சில நூற்றாண்டுகளில், மனிதர்கள் தாங்கள் வணங்கிய ஆன்மீக தலைவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், அவர்களது ஆத்மாக்கள் பலவற்றை தெய்வமாக கருதி வணங்கி வருகின்றனர். தங்கள் வாழ்க்கையில் சடங்குகளை செய்யாத, மந்திரங்களை உச்சாடனம் செய்யாத சாதுக்களுக்கு அணுத்துகள்களின் இரகசியங்கள் குறித்து எதுவும் தெரியாது. ஆகவே, அவர்கள் இறந்த பின்னர், அவர்களது ஆத்மாவுக்கும் அணுத்துகள்களை கையாளுவது பற்றியும் அதிகமாக எதுவும் தெரிந்திருக்காது. சில சாதுக்கள், அவர்களது மனித வாழ்வில் பக்தர்கள் மத்தியில் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தியிருப்பார்கள். ஆகவே அவர்கள் இறந்த பின்னரும், அவர்களது ஆத்மாக்கள் பக்தர்களால் வணங்கப்படுகிறது. தற்போதைய காலம், நவீன, விஞ்ஞானமயமான காலம். ஆகவே, எந்த சந்தேகத்தையும் விஞ்ஞான அடிப்படையில் தெளிவுபடுத்திக் கொள்ளவே அறிவார்ந்த மக்கள் விரும்புகின்றனர். ஆகவே, அணுத்துகள்களை கையாளும் திறன்பெற்ற தெய்வங்களிடமிருந்து உண்மையான அருளை பெற வேண்டுமென்றால், அணுத்துகள்களின் இயல்புகள், ஆற்றல்கள், பிரதிபலிப்புக்கள் மற்றும் அதிர்வுகளை ஒருவர் போதுமான அளவு புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட அறிவை நாம் பெற்று விட்டால், நமது ஆத்மாவாலும் எளிதாக முக்திநிலையை அடைந்துவிட முடியும்.

முக்தி நிலை என்ற வார்த்தையை நாம் பெரிதாக கற்பனை செய்து கொள்கிறோம். ஆனால் அது அப்படி ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. எந்த ஒரு சாதாரண மனிதரும், ஏதாவது ஒரு தெய்வத்திற்கு (அழிவற்ற ஆத்மாக்கள்) அக்னி பூஜைகள் செய்வதன் மூலமும், கோவில்கள் கட்டுவது மூலமும் சக்தியூட்டினால், அவரால் எளிதாக முக்தி நிலையை அடைந்துவிட முடியும். அது ஒன்றும் முனிவர்களுக்கும், ஆன்மீக தலைவர்களுக்கு மட்டுமே செய்ய முடிந்த ஒன்றல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு மாறாக, எந்த ஒரு தெய்வத்தையும் வணங்காமல், நமது திறன்கள், அறிவு, உறவினர்களின் ஆதரவு மட்டுமே போதும் என்ற மனித வாழ்க்கை முறையை வாழ விருப்பம் கொண்டால், அப்படியும் வாழ்ந்து விடலாம். நமக்கு மனோதிடம் இருந்தால், சோதனைகள் நம்மை சூழும்போதும் நாமே அவற்றை எதிர்கொள்ள முடியும். அதற்கு தெய்வத்தின் துணை எதுவும் தேவையில்லை.

நீங்கள் உங்கள் வாழ்வில் கோடிக்கணக்கான பணத்தை சம்பாதித்துவிட்டு, ஒரு நாள் அமைதியாக இறந்தும் விடலாம். அந்நிலையில், உங்கள் உடலின் அணுத்துகள்கள், கீழ்நிலை உயிரினமாக மீண்டும் பிறவி எடுப்பது அல்லது ஜடப்பொருட்களாக அப்படியே இருப்பது போன்ற இயற்கையான வாழ்க்கை சுழற்சிமுறையை எதிர்கொண்டுவிடும். அப்படி ஒரு சாதாரண வாழ்க்கைமுறை போதும் என்று நீங்கள் நினைத்தால், எந்த தெய்வத்தை வணங்குவதற்கும் நீங்கள் நேரத்தை செலவழிக்க வேண்டாம். மறுமை வாழ்வு, முக்திநிலை, சொர்க்கம் என்றெல்லாம் ஒன்று இருக்கிறது என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டிய அவசியம் கிடையாது.

ஆனால், மரணத்திற்கு பிந்தைய வாழ்வின் முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்திருந்தால், பின்னர் நீங்கள் ஏதாவது ஒரு தெய்வீக ஆத்மாவை வணங்கியே ஆக வேண்டும். அப்போதுதான், தெய்வங்களின் துணையுடன், உங்களது மறுமை வாழ்வில், அழிவற்ற வாழ்வை, நீங்கள் எதிர்பார்க்க முடியும். சொர்க்கம், நரகம் என்பது குறித்த விளக்கங்களை உரிய முறையில் இப்புத்தகம் எடுத்து கூறுகிறது. பலர் நம்புவதைப்போல, மறுமை வாழ்வில் நமது ஆத்மா வசிப்பதற்கு சொர்க்கம் அல்லது நரகம் போன்ற இடங்கள் பூமிக்கு மேலே, வானத்தில் எதுவும் கிடையாது. நமது ஆத்மா எங்கு வசிக்கிறது, தனது ஆத்ம சக்தியை வலுப்படுத்திக் கொள்வதற்கு அது மேற்கொண்டு எப்படி உணவு சக்திகளை பெறுகிறது போன்ற விஷயங்களே மறுமை வாழ்வில் நமது ஆத்மாவின் அந்தஸ்த்தை நிர்ணயம் செய்கிறது. தெய்வங்களிடமிருந்து ஆதரவு கிடைக்கும்போது, நமது ஆத்மாவுக்கு கோவிலில் தெய்வங்களோடு சேர்ந்து வாழ்வதற்கும், அங்கு நடத்தப்படும் சடங்குகளிலிருந்து உணவு சக்திகளை பெறுவதற்கும் வாய்ப்பு கிடைக்கிறது. பின்னர், கோவிலில் உள்ள தெய்வீக ஆத்மாவின் உதவியோடு அணுத்துகள்களை கையாளும் திறன்களை உங்களது ஆத்மா படிப்படியாக வளர்த்து கொண்டு, அவர்களது கீழ் பரிவார தெய்வம் என்ற அந்தஸ்த்தையும் பெறுகிறது. அந்த வகையில், காலப்போக்கில் உங்களது ஆத்மாவும் வணங்கப்படும் நிலைக்கு வந்து விடுகிறது. அந்நிலைதான், ஒருவரின் மறுமைவாழ்வில் சொர்க்கம் எனப்படுகிறது.

நாம் வாழ்வதற்கு சொந்தமாக வீடு இல்லை என்றால் வாடகை வீட்டில் வசிப்போம். ஆனால், நமது மறுமை வாழ்வில், நமது ஆத்மாவுக்கு வசிக்க இடம் (கோவில்) இல்லை என்றால், அது தெருக்களிலும், மயானங்களிலும்தான் வாழ முடியும். அந்நிலையில், நமது ஆத்மா, கோடிக்கணக்கான தனிப்பட்ட சக்தி துகள்களாக வேகமாக சிதைந்து, காற்றோடு கலந்து விடுகிறது அல்லது பூமியின் பரப்பின் மீது விழுந்து விடுகிறது. பிறகு, உங்களது அனைத்து ஆத்ம சக்தி துகள்களும் புல், புழு போன்ற கீழ்நிலை உயிரினமாகவோ அல்லது கல், மணல் போன்ற ஜடப்பொருட்களாகவோ மறுபிறப்பு எடுக்கின்றன. அப்படிப்பட்ட நிலைதான், நமது ஆத்மாவுக்கு நரகம் போன்ற வாழ்வு எனப்படுகிறது. வசிக்க இடமின்றி தெருக்களில் வாழும் மனிதர்கள் விரக்தியான, பலவீனமான, ஆரோக்கியமற்ற நிலையில் இருப்பதைப்போல, மனித ஆத்மாக்களுக்கு எந்த வழிபாட்டு தலங்களிலும் வசிக்க இடம் கிடைக்கவில்லை என்றால், மயானத்தில், விரக்தியோடும், வேதனையோடும் சுற்றி வந்து கொண்டிருக்கும். உருக்குலைந்த வடிவத்தில் காணப்படும் அவைதான், பேய்கள் என அழைக்கப்படுகின்றன.

பணமில்லாத ஏழைகள், பலமாக இருந்து எந்த அடிப்படை வசதியும் பெறவில்லை என்றால், சமூக விரோதிகளாக மாறி, மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்யக்கூடும். அதேபோல, மனோதிடம் படைத்த மனித ஆத்மாக்களுக்கு, கோவில்களில் வசிக்க இடம் கிடைக்காவிட்டால், அவை தீயசக்திகளாக, துஷ்ட தேவதைகளாக மாறிவிடுகின்றன. ஒவ்வொரு மனிதனும், அணுத்துகள்களின் தொகுப்பாக, கண்ணுக்கு தெரிகின்ற மனித உடல் கொண்டவர்களாக திகழ்கின்றனர். அதேபோல, ஒவ்வொரு தெய்வமும் (அழிவற்ற மனித ஆத்மாக்கள்) அணுத்துகள்களின் தொகுப்பாகவே இருக்கின்றன. அவற்றுக்கு ஆத்ம சக்தி என்று பெயர். ஒரு மனித ஆத்மாவில் உள்ள இந்த கண்ணுக்கு தெரியாத அணுத்துகள்கள், மனித வாழ்வின்போது ஏற்பட்ட அணுத்துகள் இணைப்பு காரணமாக, ஒன்றாக திரண்டு, மனித ரூபத்தில், ஆனால் கண்ணுக்கு தெரியாத ரூபத்தில் இருக்கும். ஒரு மனித ஆத்மா உறுதியோடு இருக்கும்போது நாம் அதை அழிவற்ற ஆத்மா என்று அழைக்கிறோம். அதேசமயம், சாதாரண மனித ஆத்மாவின் சக்தி துகள்கள் உறுதியாக நிற்க முடியாமல், சிதறிவிடுகின்றன. ஒரு மனித ஆத்மா எப்படி அழிவற்ற ஆத்மாவாக இருப்பது என்பதுதான், தெய்வீக இரகசியமாக கருதப்படுகிறது.

அந்த மறுமை வாழ்வின் இரகசியங்கள் குறித்து இப்புத்தகத்தில் விவரித்துள்ளேன். அதை படிப்பதனால், உங்களது ஆத்மாவின் அழிவற்ற வாழ்வு பற்றி உங்களால் அறிந்து கொள்ள முடியும். சமூக சேவை செய்வதன் மூலம், தெய்வங்களோடு சேர்ந்து சொர்க்கத்தில வாழலாம் என்பது கண்மூடித்தனமான நம்பிக்கை. ஆகவே அத்தகைய வழிகாட்டுதலை தவிர்க்க வேண்டும். நமது ஆத்ம சக்தி தனது சுயமுயற்சியின் மூலமாகவே இன்னொரு மனித பிறவியை எடுத்துவிட முடியும் என்று யாரும் கற்பனை செய்ய வேண்டாம். ஒரு ஆத்மா, மீண்டும் மனிதனாக பிறப்பது என்பது, ஏதாவது ஒரு தெய்வீக ஆத்மாவின் ஆதரவு இருந்தால்தான் முடியும். இல்லையென்றால், மனித ஆத்மா சிதறிந்துவிடும்.

கோவில்களும், வழிபாட்டு தலங்களும், அழிவற்ற மனித ஆத்மாக்களின் உறைவிடங்களாக (வீடு) திகழ்கின்றன. அத்தகைய சக்தி படைத்த ஆத்மாக்கள் இல்லையென்றால், காற்றில் சுதந்திரமாக மிதக்கும் அணுத்துகள்களின் பிரதிபலிக்கும் தன்மை மூலம்தான், வணங்குபவர்கள் அருள் பெற முடியும். மேற்குறிப்பிட்ட அழிவற்ற மனித ஆத்மாக்களுக்கு சுதந்திரமாக சுற்றிவரும் அணுத்துகள்களை கையாளும் திறன் இருப்பதால், அவற்றால் பக்தர்களுக்கு அருள் வழங்க முடியும். தெய்வம் என்று குறிப்பிடும் அவர்களைத்தான் நாம் பல்வேறு தெய்வீக பெயர்களை கொண்டு அழைக்கிறோம். அவர்கள் கோவில்களில் ஒரு குழுவாக (தெய்வீக பரிவாரம்) வாழ்கின்றனர். வாழ்க்கையில், நமது திறன்களையும், அறிவையும் வெளிப்படுத்துவதற்கு நமக்கு ஏதாவது ஒரு தகுதியிருக்க வேண்டும். அதேபோல, மறுமை வாழ்விலும், அணுத்துகள் கையாளும் திறன் என்ற தகுதியின் அடிப்படையில்தான், நமது ஆத்மாவுக்கு தெய்வீக பெயர் வழங்கப்படுகிறது. ஒரு தகுதிவாய்ந்த, திறன்பெற்ற, தெய்வீக பெயரை கொண்ட ஒரு தெய்வீக ஆத்மாவை வணங்கும்போது, நமது ஆத்மாவுக்கும் அதே தெய்வீக பெயர் கிடைக்கிறது.

ஒவ்வொரு கோவிலும், காவல் தெய்வங்கள் என்ற பெயரால் அழைக்கப்படும், சில வலிமையான மனித ஆத்மாக்களால் பாதுகாக்கப்படுகின்றன. கோவிலுக்குள், தீய ஆத்மாக்கள், துஷ்ட தேவதைகள், பேய்கள், புதிதாக உருவான மனித ஆத்மாக்கள் தங்கள் கோவிலுக்குள் அத்துமீறி நுழைவதை தடுப்பதுதான் காவல் தெய்வங்களின் முக்கிய பணி. ஒரு கோவில் எவ்வளவு பெரிதாக உள்ளது என்பதை பொறுத்து, அங்கு 2 அல்லது 5 காவல் தெய்வங்கள் பணியில் இருக்கும். ஒரு கோவில் பெரிதாக இருக்கும்பட்சத்தில், அங்கு ஒரு மூலஸ்தான தெய்வம், சில காவல் தெய்வங்கள் மற்றும் சில பரிகார தெய்வங்கள் ஆகியோரை கொண்ட தெய்வீக பரிவாரம் இருந்து கொண்டு, பக்தர்களுக்கு அருள் வழங்குவார்கள். சிறிய கோவில்களில், ஒன்று அல்லது இரண்டு அழிவற்ற மனித ஆத்மாக்கள் மட்டுமே இருப்பார்கள். அவர்கள் பெரும்பாலும் காவல் தெய்வங்களாகவோ அல்லது கிராம தெய்வங்களாகவோ இருப்பர்.

மனித வாழ்வின்போது, ஒருவர் வசதியான வாழ்க்கையை வாழ்வதற்கு, இன்னொரு மனிதனுக்கு பணத்தை கொடுத்து உதவி பெற்று கொள்கிறார். ஒரு மனிதனிடமுள்ள அணுத்துகள் சக்தி, இன்னொரு மனிதனிடமிருந்து வரும் உதவியை ஏற்றுக் கொள்கிறது என்பதுதான் அதன் அர்த்தம். அதேபோல, ஒரு மனித ஆத்ம சக்தி, மறுமை வாழ்வில் வசதியான வாழ்வை பெறுவதற்கு இன்னொரு அழிவற்ற மனித ஆத்மாவிடமிருந்து (தெய்வம்) உதவியை பெற்று கொள்கிறது. நாம் எந்த தெய்வத்துக்கு சடங்குகள் மற்றும் பூஜைகள் மூலமாக அணுத்துகள் சக்திகளை வழங்குகிறோம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், அதே தெய்வத்திடமிருந்துதான், நாம் அருளை எதிர்பார்க்க முடியும். பல்வேறு தெய்வங்களுக்கு நாம் சடங்குகள் மூலம் சக்திகளை வழங்கி, பதிலுக்கு அவர்களிடமிருந்து அருளை பெற்றுக் கொள்கிறோம். இப்படிப்பட்ட சக்தி பரிவர்த்தனை இல்லாமல், சுதந்திரமாக சுற்றி திரியும் அணுத்துகள்களே தெய்வம், அந்த தெய்வம்தான் மறுமை வாழ்வில் மனித ஆத்மாக்கள் வாழ்வதற்கு சொர்க்கத்தை உருவாக்கி தருகிறது என்று குருட்டுத்தனமாக நம்புவது அறிவற்ற செயலாகும்.

செல்வம், அறிவு போன்ற வாழ்க்கையின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றி கொள்ளவே, ஏழை மக்கள், தெய்வங்களிடம் பிரார்த்தனை செய்து கொள்கின்றனர். ஆனால், செல்வந்தர்களும், தெய்வீகம் பற்றிய அறிவுள்ளவர்களும், தங்களது செல்வத்தை, கோவில் கட்டுவது, அக்னி பூஜை செய்வது போன்ற தெய்வீக காரியங்களில் ஈடுபடுவதற்கு அதிகளவு பயன்படுத்த வேண்டும். செல்வமும் அணுத்துகள்கள்தான் என்ற முறையில், அவற்றை தெய்வங்கள், கோவில்கள் மற்றும் அக்னி பூஜைகள் மூலம் தெய்வீக சக்தியாக மாற்றிக் கொண்டு, மறுமை வாழ்விற்கு தேவையான ஆதரவினை தெய்வங்களிடமிருந்து பெற்று கொள்ளலாம். அதைத்தான், அன்றைய அரசர்கள், செல்வந்தர்கள் மற்றும் ரிஷிகள் செய்தனர்.

பல செல்வந்தர்கள், முக்தி நிலையை பெறுவதற்கு விரும்புகின்றனர். அதற்காக தங்களது பணத்தை, கோவில்கள் கட்டுவதற்கும், வழிபாட்டு தலங்களை கட்டுவதற்கும் பயன்படுத்துவதற்கு அவர்கள் தயாராகவுள்ளனர். ஆனால், அவர்களுக்கு உரிய முறையில் வழிகாட்டி, அணுத்துகள்கள் குறித்த தத்துவங்களை விளக்குவதற்கு யாரும் இல்லை. அவர்களை சரியான முறையில் வழிநடத்தினால், அவர்கள் பிரபஞ்ச சக்திகளை சிறப்பாக கையாளும் திறன்பெற்ற தெய்வங்களிடமிருந்து நிச்சயமாக பலனடைவார்கள். நீங்கள் வைத்திருக்கும் செல்வம் உங்களுக்கு முக்தி நிலையை பெற்றுத் தருவதற்கு உதவ வேண்டும். நீங்கள் எப்படி உங்கள் பணத்தின் மூலமும், ஏற்கனவேவுள்ள தெய்வீக ஆத்மாக்கள் மூலமும் தெய்வீக ஆத்மாவாக மாற முடியும் என்பது குறித்து இப்புத்தகம் விளக்குகிறது. நமது பெற்றோர்களை நாம் தேர்வு செய்ய முடியாது. ஆனால், பல்வேறு வகைப்பட்ட, திறன்களையுடைய தெய்வங்களை நாம் தேர்வு செய்து கொண்டு, அவர்கள் மூலம் நாமும் தெய்வீக அந்தஸ்த்தை அடைய முடியும். திறன்பெற்ற தெய்வங்களுக்கு நீங்கள் கோவில்களை கட்டும்போது, முந்தைய காலத்தில் முனிவர்கள் செய்ததுபோல, தவம், போன்றவற்றை செய்யாமலேயே உங்களால் ஆத்ம சக்தி ரூபத்தில் நிரந்தரமாக வாழமுடியும்.

**நீங்கள் அனைவரும் முக்தி நிலையை எய்துவதற்கும்,**
**மறுமை வாழ்வில் தெய்வீக நிலைக்கு உயர்வதற்கும்**
**எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்!**